www.Padasalai.Net www.CBSEtips.in

மதுரை மாவட்டம் 22.09.2023

# காலாண்டுத் தேர்வு - 2023

பதிவு எண்.

**11 - STD**

## கணக்குப்பதிவியல்

நேரம்: 3.00 மதிப்பெண்கள்: 90

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் :** (20 X 1 =20)

1. நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
   (அ) கடனீந்தோர் (ஆ) பணியாளர் (இ) வாடிக்கையாளர் (ஈ) அரசு
2. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதை கூறும் கருத்து
   (அ) பண மதிப்பீட்டுக் கருத்து (ஆ) அடக்க விலை கருத்து
   (இ) வணிகத்த னித்த ன்மை கருத்து (ஈ) இரட்டைத் தன்மை கருத்து
3. இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
   (அ) இந்திய மைய வங்கி (ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
   (இ) உச்ச நீதி மன்றம் (ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்
4. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ரூ.1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ரூ.60,000 எனில், அந்நிறுவனத்தில் முதல் _____
   (அ) ரூ. 1,60,000 (ஆ) ரூ. 60,000 (இ) ரூ. 1,00,000 (ஈ) ரூ. 40,000
5. கணக்கியல் சமன்பாடு, எந்த கணக்கியல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது?
   (அ) இரட்டைத் தன்மை (ஆ) நிலைத்தன்மை (இ) நிறுவனத் தொடர்ச்சி (ஈ) நிகழ்வுத்தன்மை
6. முன் கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு
   (அ) பெயரளவு கணக்கு (ஆ) ஆள்சார் கணக்கு
   (இ) சொத்துக் கணக்கு (ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
7. பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம்
   (அ) நிதி நிலைமையை அறிய (ஆ) இலாபம் அல்லது நட்டத்தை அறிய
   (இ) நிதிநிலைமை மற்றும் இலாப நட்டத்தை அறிய
   (ஈ) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய
8. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தை விட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன்பொருள்
   (அ) வரவு இருப்பு (ஆ) பற்று இருப்பு (இ) இருப்பு இன்மை (ஈ) பற்றும் மற்றும் வரவு இருப்பு
9. பேரேட்டுக் கணக்குகளை தயாரித்து முடித்தவுடன் அடுத்து தயாரிக்கப்படுவது
   (அ) வியாபாரக் கணக்கு (ஆ) இருப்பாய்வு (இ) குறிப்பேடு (ஈ) இலாபநட்டக் கணக்கு
10. பின்வரும் எந்த முறை அல்லது முறைகளில் இருப்பாய்வு தயாரிக்கப்படுகிறது?
    (அ) இருப்பு முறை (ஆ) மொத்தத் தொகை முறை
    (இ) மொத்தத் தொகை முறை மற்றும் இருப்பு முறை (ஈ) (அ), (ஆ) மற்றும் (இ)
11. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது
    (அ) ஆண்டு இறுதியில் (ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்
    (இ) ஒரு பருவ காலம் முடிந்ததும் (ஈ) இவை ஏதும் இல்லை
12. ஒரு குறிப்பிட்ட கால கொள்முதல் ஏட்டின் மொத்தம், எடுத்தெழுதப்படுவது
    (அ) கொள்முதல் கணக்கின் பற்றுபக்கம் (ஆ) விற்பனை கணக்கின் பற்றுபக்கம்
    (இ) கொள்முதல் கணக்கின் வரவுப் பக்க ம் (ஈ) விற்பனை கணக்கின் வரவுப் பக்கம்
13. நிலைச்சொத்துக்கள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்ய வேண்டிய ஏடு
    (அ) கொள்முதல் ஏடு (ஆ) விற்பனை ஏடு (இ) கொள்முதல் திருப்ப ஏடு (ஈ) உரிய குறிப்பேடு
14. விற்பனை ஏட்டில் பதிவு செய்வதற்கு பயன்படும் அடிப்படை ஆவணம்
    (அ) பற்றுக் குறிப்பு (ஆ) வரவு குறிப்பு (இ) இடாப்பு (ஈ) ரொக்க இரசீது
15. சாதாரண ரொக்க ஏட்டை வைத்திருக்கும் ஒரு நிறுவனம், எந்த கணக்கை தயாரிக்க தேவைஇல்லை ?
    (அ) பேரேட்டில் விற்பனைக் கணக்கு (ஆ) பேரேட்டில் கொள்முதல் கணக்கு
    (இ) பேரேட்டில் முதல் கணக்கு (ஈ) பேரேட்டில் ரொக்கக் கணக்கு
16. எந்தச் செலவிற்கு சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்?
    (அ) தபால் செலவு மற்றும் பயணச் செலவுகள் (ஆ) மேலாளரின் ஊதியம்
    (இ) அறைகலன் மற்றும் பொருத்துகைகள் வாங்க (ஈ) மூலப் பொருட்கள் வாங்க
17. தள்ளுபடி, ரொக்கம் மற்றும் வங்கி பத்திகளுடைய ரொக்க ஏட்டை இவ்வாறு அழைக்கலாம்.
    (அ) சாதாரண ரொக்க ஏடு (ஆ) இருபத்தி ரொக்க ஏடு
    (இ) முப்பத்தி ரொக்க ஏடு (ஈ) சில்லறை ரொக்க ஏடு
18. வங்கி அறிக்கை என்பது
    (அ) ரொக்க ஏட்டின் ரொக்கப் பத்தியின் நகல் (ஆ) ரொக்க ஏட்டின் வங்கிப்பத்தியின் நகல்
    (இ) வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்
    (ஈ) வணிகத்தால் விடுக்கப்பட்ட காசோலையின் நகல்
19. வங்கியிலிருந்து பணம் எடுக்கும் போது வங்கியானது.
    (அ) வாடிக்கையாளர் கணக்கில் வரவு செய்யும் (ஆ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று செய்யும்
    (இ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று மற்றும் வரவு செய்யும் (ஈ) மேற்கண்ட ஏதுமில்லை
20. பின்வருவனவற்றில் எது காலத்தினால் ஏற்படும் வேறுபாடு அல்ல ?
    (அ) செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது
    (ஆ) விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது
    (இ) வங்கியில் நேரடியாகச் செலுத்திய தொகை (ஈ) ரொக்க ஏட்டில் தவறுதலாக பற்று வைத்தது

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்: (வினா எண். 30 கட்டாயம்)** (7 X 2 =14)

21. கணக்கியலை வரையறு.
22. கணக்கியலில் முழு வெளியீட்டு கொள்கை என்றால் என்ன?
23. பின்வருவனவற்றைஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.
    (அ) முதல் (ஆ) கட்டடம் (இ) கொள்முதல் (ஈ) ரொக்கம்



Scanned with CamScanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

24. எடுத்தெழுதுதல் என்றால் என்ன ?
25. ரொக்க ஏடு என்றால் என்ன?
26. உரிய குறிப்பேடு என்றால் என்ன?
27. வங்கிச் சரிகட்டும் பட்டியல் என்றால் என்ன?
28. செலுத்தற்குரிய நாளை கணக்கிடுக.

| மாற்றுச்சீட்டின் நாள் | தவணைக்காலம் | செலுத்தற்குரிய நாள் |
|---|---|---|
| மார்ச் 1 | 2 மாதங்கள் | ? |
| ஜூலை 12 | 1 மாதம் | ? |

29. கீழ்க்கண்ட இருப்பாய்வில் சில பிழைகள் உள்ளன. அவற்றை சரிசெய்து மீண்டும் ஒரு இருப்பாய்வைத் தயாரிக்கவும்.

31.03.2017 -ஆம் நாளைய இருப்பாய்வு

| கணக்கின் பெயர் | பற்று இருப்பு ரூ. | வரவு இருப்பு ரூ. |
|---|---|---|
| பெற்றத் தள்ளுபடி | 3,000 | |
| முதல் | 72,800 | |
| கொள்முதல் திருப்பம் | | 2,600 |
| கடனீந்தோர் | 50,000 | |
| கட்டடம் | | 60,000 |
| வங்கி | 28,400 | |

30. குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, ரொக்க கணக்கில் எடுத்து எழுதுக.
2016, ஜூன்
1 ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது 1,10,000
10 கூடுதல் முதலீடு 50,000
10 சொந்த செலவுக்கு ரொக்கம் எடுத்துக் கொண்டது 20,000

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும் : (வினா எண். 40 கட்டாயம்) (7 X 3 = 21)**

31. நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக.
32. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக:
சொத்துகள் = முதல்+ பொறுப்புகள்
(அ) 3,00,000 = 90,000 + ?
(ஆ) 7,00,000 = ?+ 60,000
(இ) ? = 5,60,000 + 70,000
33. 2018, ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன . சொத்துகள்: ரொக்கம் ரூ.40,000 ; சரக்கிருப்பு ரூ.50,000 ; ராம் என்பவரிடமிருந்து பெற வேண்டியது ரூ.20,000; இயந்திரம் ரூ.40,000; பொறுப்புகள் : விஜய் என்பவருக்கு செலுத்தவேண்டியது ரூ.10,000. தொடக்கப் பதிவினை தருக.
34. கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப்பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டுக:
(i) வெளித்தூக்குக்கூலி (ii) வாராக்கடன் (iii) முதல்
(iv) வட்டிப் பெற்றது (v)விற்பனைத்திருப்பம் (vi) எடுப்புகள்
35. சில்லறை ரொக்க ஏட்டில் முன் பண மீட்பு முறையின் பொருளை விளக்குக.
36. பின்வரும் நடவடிக்கைகளை மின்சாதனங்கள் விற்பனைச் செய்யும் சுபஸ்ரீ மின் பொருள்நிறுவனத்தின் கொள்முதல் ஏட்டில் பதிவு செய்க .
2017 ஏப்ரல்
5 கார்த்திக் மின் பொருள் நிறுவனத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது.
10 மின் சலவைப் பெட்டிகள் ஒன்று ரூ. 2,500 வீதம்
19 கேதான் மின் பொருளகத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது
3 மின்சார நீர் சூடேற்றி ஒன்று ரூ. 6,000 வீதம்
25 போலார் மின் பொருள் விற்பனையகத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது
10 மின் விசிறிகள் ஒன்று ரூ. 2,000 வீதம்
29 M நிறுவனத்திடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது.
10 மின்சார அடுப்புகள் ஒன்று ரூ. 3,000 வீதம்
37. பின்வரும் விவரங்களிலிருந்து ஜெயக்குமார் என்பவரின் 2016 டிசம்பர் 31-ம் நாளுக்குரியவங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார் செய்க .
(அ) ரொக்க ஏட்டின் படி இருப்பு ரூ. 7,130
(ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது ரூ. 1,000
(இ) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ரூ. 800
38. ரொக்கத் தள்ளுபடிக்கும் ,வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளைஎழுதுக.
39. குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.
40. இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

**V. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்: (7 X 5 = 35)**

41. (அ)பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.
(அ) முருகன் ரூ.80,000 பணத்துடன் தொழிலைத் தொடங்கினார்.
(ஆ) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ரூ. 30,000.
(இ) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ரூ. 5,000.
(ஈ) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு, பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது ரூ.5,000.
(உ) கூடுதல் முதல் இட்டது ரூ.10,000. **(அல்லது)**
(ஆ) 2017 ஏப்ரல் மாதத்திற்கான பின்வரும் நடவடிக்கைகளை பிரதீப் என்பவரின் தனிப்பத்தி ரொக்கஏட்டில் பதியவும்.
1 வணிகம் ரொக்கத்துடன் துவங்கியது 27,000
5 ரொக்கத்திற்கு சரக்குகள் வாங்கியது 6,000



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
Scanned with CamScanner

10 ரொக்கத்திற்கு சரக்குகள் விற்றது 11,000
13 ரொக்கம் வங்கியில் செலுத்தியது 5,000
14 சங்கீதாவிற்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது 9,000
17 பிரீத்தி என்பவருக்கு கடனாகச் சரக்கு விற்றது 13,000
21 ரொக்கம் செலுத்தி எழுதுபொருள் வாங்கியது 200
25 முருகனுக்கு ரொக்கம் செலுத்தியது 14,000
26 ரொக்கமாக கழிவு கொடுத்தது 700
29 அலுவலக தேவைக்காக வங்கியிலிருந்து எடுத்தது 4,000
30 காசோலை மூலம் வாடகை செலுத்தியது 3,000

42. (அ) ஜெயசீலி என்னும் தனிவணிகர் ஒரு பலசரக்கு கடையினை நடத்தி வருகிறார். 2018, ஜனவரியில்அக்கடையின்நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன அவைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.
1 ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது 80,000
2 வங்கியில் செலுத்திய ரொக்கம் 40,000
3 ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது 5,000
4 லிப்டன் நிறுவனத்திடமிருந்து சரக்குகளை கடனுக்கு கொள்முதல் செய்தது 10,000
5 ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது 11,000
6 சம்பளத்தை ரொக்கமாக வழங்கியது5,000
7 லிப்டன் நிறுவனத்திடம் ஜனவரி 4 அன்று கொள்முதல் செய்ததற்கானதொகை காசோலை மூலம் செலுத்தப்பட்டது
8 ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது 4,000
9 மின் கட்டணம் ரொக்கமாக செலுத்தப்பட்டது1,000
10 நிலை அறிவுறுத்தலின் படி வங்கி செலுத்திய காப்பீட்டு முனைமம் 300 **(அல்லது)**

(ஆ) கீழ்கண்டநடவடிக்கைகளைக்கொண்டு குணசேகரன் அவர்களின் முப்பத்தி ரொக்கஏட்டைத் தயாரிக்கவும். 2017, ஜனவரி.
1 ரொக்கஇருப்பு 50,000
1 வங்கி இருப்பு 90,000
2 ரோகினி என்பவருக்கு கடனுக்குச் சரக்கு விற்றது 15,000.
5 ரோகினியிடமிருந்து ரூ.14,500 க்கான காசோலைப்பெறப்பட்டு அவர்கணக்கு தீர்க்கப்பட்டது. அக்காசோலைஉடனேவங்கியில்செலுத்தப்பட்டது
6 ரொக்கம் வைப்பு இயந்திரத்தின் மூலம் வங்கியில்பணம் செலுத்தியது 18,000
7 ஸ்ரீதருக்கு விற்றசரக்கு ரூ. 12,000. அவர்ரூ. 11,800 எடுப்பு அட்டை மூலம் செலுத்தி கணக்கு தீர்த்துக் கொண்டார். அவர் பெற்ற தள்ளுபடி ரூ. 200.
10 வங்கியிலிருந்து அலுவலகச் செலவுகளுக்காக பணம் எடுத்தது 2,000
12 ராஜாஎன்பவரிடமிருந்து சரக்கு வாங்கியது ரூ. 10,000..ரூ. 9,800 கடன் அட்டை மூலம் செலுத்தப்பட்டு கணக்குத் தீர்க்கப்பட்டது. அவரிடமிருந்து பெற்ற தள்ளுபடி ரூ. 200.
14 நதியாதேசிய மின்னணு பணப்பரிமாற்றம்மூலம் அனுப்பியது 18,000
27 ரோகினியின் காசோலைமறுக்கப்பட்டது.

43. (அ) கணினி வியாபாரம் செய்யும் இரமேஷின் குறிப்பேட்டில் பின்வரும் நடவடிக்கைகளைப் பதிவு செய்க. 2018,மார்ச்
1 இரமேஷ், ரொக்கம் ரூ. 3,00,000, சரக்கிருப்பு ரூ. 80,000 மற்றும்அறைகலன் ரூ.27,000 ஆகியவற்றுடன் தொழில் தொடங்கினார்.
3 ஜெயலெட்சுமி அறைகலன் விற்பனையகத்திடம் இருந்து ரூ. 28,000 மதிப்புள்ளஅறைகலன்கள் கடனுக்கு வாங்கப்பட்டது.
7 சியாம் என்பவரிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ரூ. 50,000.
8 சியாம் எழுதிய மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது ரூ. 50,000.
9 ஜெயலெட்சுமி அறைகலன் விற்பனையகத்திற்கு செலுத்த வேண்டிய தொகையைபாதி காசோலை மூலம் செலுத்தப்பட்டது. **(அல்லது)**

(ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து காமாட்சி நிறுவனத்தின் 2018 மார்ச் 31-ம் நாளன்றைய வங்கிச்சரிகட்டும் பட்டியலை தயார் செய்க
(அ) ரொக்க ஏட்டின் படி பற்றிருப்பு ரூ. 10,500
(ஆ) வங்கியில் செலுத்திய காசோலை ரூ. 5,500 வங்கியால் வரவு வைக்கப்பட்டது. ஆனால்ரொக்க ஏட்டில் இரு முறை பதியப்பட்டது.
(இ) விடுத்த காசோலை ரூ.7,000 செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்பட்டது குறித்து ரொக்க ஏட்டில் பதிவு இல்லை.
(ஈ) காசோலை புத்தகக் கட்டணம் ரூ. 200 வங்கியால் பற்று வைக்கப்பட்டது ரொக்க ஏட்டில்பதியப்படவில்லை.
(உ) பணம் வைப்பு இயந்திரம் வாயிலாக வாடிக்கையாளர் செலுத்திய ரூ.1,000 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.

44. (அ) கீழ்கண்ட நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து அவற்றைக் கொண்டு ரொக்கக்கணக்கு மற்றும் விற்பனை கணக்கு ஆகியவற்றை தயாரிக்கவும்.2017, அக்.
10 சரக்குகள் விற்பனை செய்யப்பட்டு காசோலையும் பெறப்பட்டதுஆனால், அதனை வங்கியில் செலுத்தவில்லை 30,000
14 கோபி என்பவருக்கு கடனாக விற்ற சரக்கு 12,000
20 கோபியிடமிருந்து ரொக்கம் பெற்றது. 12,000 **(அல்லது)**

(ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து முன் பண மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.
2017 ஜனவரி
1 சில்லறைச் செலவுகளுக்காக ரொக்கம் பெற்றது 500
2 பயணச்செலவுக்கு கொடுத்தது 5
வண்டிக் கட்டண ம் கொடுத்தது 12



Kindly send me your study materials to padasalai.net@gmail.com Scanned with CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in

3 தபால் செலவு செய்தது 15
தற்காலிக வேலைபாட்களுக்கு கூலி கொடுத்தது 66
4 எழுது பொருள் வாங்கியது 134
போக்குவரத்துச் செலவுக்கு கொடுத்தது 18
5 பழுதுபார்ப்புச் செலவு செய்தது 65
பேருந்துக் கட்டணம் செலுத்தியது ,11
வண்டிக் கட்டணம் கொடுத்தது 24

45. (அ) ஆனந்த் என்பவரின் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடையரொக்க ஏட்டில் பதிவு செய்யவும்.2017,டிசம்பர்
1 கைவச ரொக்கம் 19,500
4 ரொக்கத்திற்கு சரக்கு விற்றது 32,000
5 காந்தியிடம் கடனுக்கு கொள்முதல் செய்தது 20,000
9 கோபுவிடம் பெற்றது 11,800
அவருக்கு அளித்த தள்ளுபடி 200
15 மின் கட்டணம் ரொக்கமாகச் செலுத்தியது 12,500
17 ரொக்கம் செலுத்தி கணிப்பொறி மற்றும் அதன்இதர பாகங்களை வாங்கியது 16,800
25 காந்திக்கு ரூ.19,700 செலுத்தி அவர் கணக்கு முழுவதையும்தீர்த்துக் கொண்டது
28 திருவேங்கடத்திடம் ரொக்கம் பெற்றது 8,900
அவருக்கு அளித்த தள்ளுபடி 100
30 வியாபார செலவுகளை ரொக்கமாகச் செலுத்தியது 3,500 **(அல்லது)**
(ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து ஆனந்த் என்பவரின் கணக்கைத் தயாரிக்கவும்.
2017 , ஜூலை
1 ஆனந்த் கணக்கின் வரவு இருப்பு 4,000
15ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது 2,000
18ஆனந்திடமிருந்து கடனாகக் கொள்முதல் செய்தது 8,000
20ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது 3,960. அவர் அளித்த தள்ளுபடி 40
25 ஆனந்திடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது 5,000.

46. (அ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு 2017 ஏப்ரல் மாதத்திற்கான சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு மற்றும் விற்பனை ஏடு தயார் செய்க .2017
ஏப்ரல் 1 காஞ்சிபுரம் பிரசாத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
ஒரு மீட்டர் ரூ.450 வீதம் 100 மீட்டர் சில்க் துணி
ஒரு மீட்டர் ரூ.180 வீதம் 75 மீட்டர் வெல்வெட்துணி
ஏப்ரல் 10 சென்னை இரத்தினத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது
ஒரு மீட்டர் ரூ.490 வீதம் 60 மீட்டர் சில்க்துணி
ஒரு மீட்டர் ரூ.210 விதம் 50 மீட்டர் வெல்வெட்துணி
ஏப்ரல் 18 நாதன் நிறுவனம் நம்மிடமிருந்து கடனுக்கு வாங்கியது
ஒரு மீட்டர் ரூ.510 வீதம் 100 மீட்டர் சில்க் துணி
ஏப்ரல் 20 மதுரை , ஹரிராம் துணியகத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
கட்டு ஒன்று ரூ.730 வீதம் 50 கட்டுகள் காடாத் துணி
கட்டு ஒன்று ரூ.650 வீதம் 80 கட்டுகள் காலிக்கோ துணி
ஏப்ரல் 24 கரூர், மோகனிடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது
சட்டைத்துணிகள் மதிப்பு ரூ.7,000
சேலைகள் மதிப்பு ரூ.25,000 **(அல்லது)**
(ஆ) ராஜேஷ் என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு31.3.2017 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வைத் தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 13,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 12,000 |
| கையிருப்புரொக்கம் | 1,000 | பற்பல கடனாளிகள் | 17,100 |
| பயணச் செலவுகள் | 350 | வங்கிக் கட்டணம் | 750 |
| பெற்றத் தள்ளுபடி | 1,300 | முதல் | 25,900 |
| எடுப்புகள் | 7,000 | | |

47. (அ) கீழ்கண்ட தகவல்களிலிருந்து 2017 மார்ச் 31, ஆம் நாளன்றைய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயார் செய்து வங்கி அறிக்கையின் படியான இருப்பினைக் கண்டறியவும்.
(i) வங்கியில் வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது 500
(ii) விடுத்த காசோலை செலுத்துகைக்கு இதுவரை முன்னிலைப்படுத்தப்படாதது 1,000
(iii) வங்கியால் பிடித்தம் செய்யப்பட்ட வட்டி 100
(iv) நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய வாடகை 200
(v) ரொக்க ஏட்டின் படி இருப்பு 300 **(அல்லது)**
(ஆ) பின்வரும் நடவடிக்கைகளை பொன்னியின் விற்பனை ஏடு மற்றும் விற்பனைத் திருப்ப ஏட்டில்பதிவுசெய்து பேரேட்டில் எடுத்தெழுதவும்.2017
ஆகஸ்டு 1 இடாப் பு எண் 68ன் படி, செந்திலுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ரூ.20,500
ஆகஸ்டு 4 இடாப் பு எண் 74ன் படி, மாதவனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ரூ.12,800
ஆகஸ்டு 7 இடாப் பு எண் 78ன் படி, கனகசபைக்கு கடனுக்கு சரக்கு விற்றது ரூ.7,500
ஆகஸ்டு 15 வரவுக்குறிப்பு 7ன் படி, செந்தில் திருப்பிய சரக்கு மதிப்பு ரூ.1,500-க்கு ரொக்கம் அளிக்கப்படவில்லை
ஆகஸ்டு 20 செல்வத்திடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ரூ.13,300
ஆகஸ்டு 25 வரவுக்குறிப்பு 11ன் படி மாதவன் திருப்பிய சரக்கு ரூ.1,800-க்கு ரொக்கம் செலுத்தப்படவில்லை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
Scanned with CamScanner

**+1 கணக்குப்பதிவியல் காலாண்டுத்தேர்வு செப்- 23**

**சரியான விடை 20X1=20**

1. (ஆ) பணியாளர்
2. (இ) வணிகத்தன்மை கருத்து
3. (ஈ) இந்திய பட்டைய கணக்காளர் நிறுவனம்
4. (ஈ) ரூ 40 000
5. (அ) இரட்டைத் தன்மை
6. (ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் க/கு
7. (ஈ) ஒவ்வொரு பேரேட்டு கணக்கின் இருப்பை அறிய
8. (ஆ) பற்று இருப்பு
9. (ஆ) இருப்பாய்வு
10. (ஈ) அ ஆ மற்றும் இ
11. (ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்
12. (அ)கொள்முதல் கணக்கின் பற்றுப் பக்கம்
13. (ஈ) உரிய குறிப்பேடு
14. (இ) இடாப்பு
15. (ஈ) பேரேட்டு கணக்கின் ரொக்க் கணக்கு
16. (அ) தபால் செலவு மற்றும் பயணச் செலவு
17. (இ) முப்பத்தி ரொக்க ஏடு
18. (இ) வங்கிப் புத்தகத்தில் வாடிக்கையாளரின் நகல்
19. (ஆ)வாடிக்கையாளர் கணக்கில் பற்று செய்யும்
20. (ஈ) ரொக்கஏட்டில் தவறுதலாக பற்றுவைத்தது

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. கணக்கியலைவரையறு** அமெரிக்க கணக்கியல் கழகத்தின் கூற்றின்படி "கணக்கியல் என்பது பொருளாதார தகவல்களைக் கண்டறிந்து, அளவீட்டு, தகவல் தெரிவிக்கக்கூடிய ஒரு செயல்பாடாகும். இதன் மூலம் தகவல்களைப் பயன்படுத்துவோர் தக்க தீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வகை செய்கிறது."

**22. கணக்கியல் முழு வெளியீட்டு கொள்கை:** அனைத்து முக்கியத்தகவல்களும் நிதிநிலை அறிக்கை மூலமாக வெளிப்படுத்த வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது. பெரும்பாலான நிறுவனங்களில் நிர்வாகமும் உரிமையாளர்களும் வேறுபடுத்தப்பட்டு இருப்பதால் இந்த மரபு முக்கியத்துவம் பெறுகிறது.

**23.**

| | |
|---|---|
| முதல் க/கு | **ஆள்சார் க/கு** |
| கட்டடம் க/கு | **சொத்து க/கு** |
| கொள்முதல் க/கு | **சொத்து / பெயரளவு க/கு** |
| ரொக்கம | **சொத்து க/கு** |

**24. எடுத்தெழுதுதல்:** குறிப்பேட்டில் பதிவாகி உள்ள நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவு இனங்களை பேரேட்டில் உள்ள கணக்குகளுக்கு மாற்றம் செய்வது எடுத்தெழுதுதல் எனப்படும்.

**25. ரொக்க ஏடு** என்பது ரொக்க நடவடிக்கைகளை மட்டும் நாள் வரிசைப்படி பதியக் கூடிய ஒரு ஏடாகும்.

**26. உரிய குறிப்பேடு:** துணை ஏடுகளான ரொக்க ஏடு, கொள்முதல் ஏடு, விற்பனை ஏடு, கொள்முதல் திருப்ப ஏடு, விற்பனைத் திருப்ப ஏடு, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு போன்ற ஏடுகளில் பதிய முடியாத எஞ்சிய பதிவுகள் உரிய குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகின்றன. உரிய குறிப்பேட்டில் அல்லது பொதுக் குறிப்பேட்டில் வேறு எங்கும் எந்த துணைப்பிரிவிலும் பதிவுப் பெறாத நடவடிக்கைக்களுக்கான குறிப்பேடுகள் பதிவு செய்யப்படுகின்றன

**27. வங்கிச் சரிகட்டும் பட்டியல்:** ரொக்க ஏட்டில் செய்யப்படக் கூடிய ஒவ்வொரு பதிவிற்கும், வங்கியரால் பராமரிக்கப்படக்கூடிய செல்லேட்டில் சரிநிகர் பதிவு இருக்க வேண்டும். அதே போன்று வங்கிச் செல்லேட்டில் உள்ள ஒவ்வொரு பதிவிற்கும் சரிநிகர் பதிவு ரொக்கஏட்டில் இருக்கவேண்டும். வங்கி இருப்பு இரு ஏடுகளிலும் ஒரே தொகையினைக் காண்பிக்கவேண்டும். இரண்டு இருப்புகளும் வெவ்வேறாக இருந்தால், அதற்கான காரணங்களை விளக்குவதற்காக தயாரிக்கப்படும் அறிக்கையே வங்கிச் சரிக்கட்டும் பட்டியல் என்று அழைக்கப்படுகிறது.

| **28. மாற்றுசீட்டின் நாள்** | **தவணைகாலம்** | **செலுத்த வே நாள்** |
|---|---|---|
| மார்ச் 1 | 2 மாதங்கள் | **மே 4** |
| ஜீலை 12 | 1 மாதம் | **ஆகஸ்ட்14** |

**29. இருப்பாய்வை சரிசெய்க**

| **விவரம்** | **பற்று** | **வரவு** |
|---|---|---|
| பெற்ற தள்ளுபடி | | 3000 |
| முதல் | | 72800 |
| கொள்முதல் திருப்பம் | | 2600 |
| கடனீந்தோர் | | 50000 |
| கட்டிடம் | 60000 | |
| வங்கி | 28400 | |
| **அநாமத்து க/கு** | **40000** | |
| **மொத்தம்** | **128400** | **128400** |

**30.**

| நாள் | விவரம் | | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 2016 ஜன1 | ரொக்க க/கு | ப | 110000 | |
| | முதல் க/கு | | | 110000 |
| 10 | ரொக்க க/கு | ப | 50000 | |
| | முதல் க/கு | | | 50000 |
| 28 | எடுப்பு க/கு | ப | 20000 | |
| | ரொக்க க/கு | | | 20000 |

**ரொக்க கணக்கு**

| **நாள்** | **விவ்ரம்** | **தொ** | **நாள்** | **விவரம்** | **தொ** |
|---|---|---|---|---|---|
| 16ஜீ 1 | முதல் க/கு | 110000 | 28 | எடுப்புக/கு | 20000 |
| | | | 30 | **இருப்புகீ/இ** | **140000** |
| 10 | முதல் க/கு | 50000 | | | |
| | | **160000** | | | **160000** |
| **ஜீ1** | **இருப்புகீ/கொ** | **140000** | | | |

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X3=21**

**31.நவீன வணிகஉலகில் கணக்காளரின் பங்களிப்பு**

**1.ஏடுகளைப் பராமரிப்பவர்:-** நிதிசார்ந்த நடவடிக்கைகளை முறையாக பதிவுசெய்து ஏடுகளைப் பராமரிக்கிறார்.

**2.நிர்வாகத்திற்குத் தகவல்களைத் தருபவர்:-** முடிவுகளை எடுக்கவும் மற்றும் கட்டுப்பாடுகளை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

விதிக்கவும், நிர்வாகத்திற்குத் தேவையான நிதிசார்ந்த தகவல்களை அளித்து உதவுகிறார்.

**3.வணிகச் சொத்துக்களின் காப்பாளர்:-** சொத்துக்களுக்கான பதிவேடுகளைப் பராமரிப்பதன் மூலம் நிர்வாகம் அந்தச் சொத்துக்களைப் பாதுகாத்து கட்டுப்படுத்த முடிகிறது. சொத்துக்களுக்கான காப்பீடு மற்றும் சொத்துகள் பராமரிப்பைப் பற்றிய ஆலோசனையை நிர்வாகத்திற்கு வழங்குகிறார்.

| 32.சொத்துகள் = | பொறுப்புகள் + | முதல் |
|---|---|---|
| அ) 3,00,000 = | 90,000 + | **2,10,000** |
| ஆ) 7,00,000 = | **6,40,000** + | 60,000 |
| இ) **6,30,000** = | 5,60,000 + | 70,000 |

33. **தொடக்கப் பதிவு**

| **விவரம்** | **பற்று ரூ** | **வரவு ரூ** |
|---|---|---|
| ரொக்கம் க/கு. ப. | 40000 | |
| சரக்கிருப்பு க/கு ப. | 50000 | |
| ராம் க/கு ப. | 20000 | |
| இயந்திர க/கு ப. | 40000 | |
| விஜய் க/கு | | 10000 |
| **வினோதின் முதல் க/கு** | | **140000** |

34.

| **பற்று இருப்புகள்** | **வரவு இருப்புகள்** |
|---|---|
| வெளித்தூக்குக் கூலி | முதல் |
| வாராக்கடன் | வட்டிப் பெற்றது |
| விற்பனைத் திருப்பம் | |
| எடுப்புகள் | |

**35. முன் பண மீட்பு முறை:** இம்முறைப்படி, முன் அனுபவத்தின் அடிப்படையில், சில்லறை செலவுகளை செய்வதற்காக, தேவையான அல்லது போதுமான அளவு ஒரு குறிப்பிட்ட தொகை, ஒரு குறிப்பிட்ட காலத்தின் முதல் நாளன்று, சில்லறைக் காசாளருக்கு வழங்கப்படும் (குறிப்பிட்ட காலம் என்பது ஒரு வாரம், இருவாரங்கள் அல்லது ஒரு மாதம் என இருக்கலாம்). சில்லறைக் காசாளருக்கு முன்கூட்டி வழங்கப்படும் இத்தொகைக்கு 'முன்பணம்' என்று பெயர். முன்பணம் என்ற சொல் முன் கூட்டியே பெற்ற தொகையைக் குறிக்கும்.

36. **சுபஸ்ரீ கொள்முதல் ஏடு**

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| 2017 | **கார்த்திக் நிறுவனம்** | | |
| ஏப்5 | 10 சலவை பெட்டி 1 2500வீ | | 25000 |
| 19 | **கேதான் மின் பொருளகம்** | | |
| | 3மின்சாரசூடேற்றி 1 6000 வீ | | 18000 |
| 25 | **போலார்மின்பொருள் நிலைய** | | |
| | 10 மின்விசிறிகள் 1 2000வீ | | 20000 |
| | **கொள்முதல்** | | **63000** |

37. வங்கி சரிக்கட்டும் பட்டியல்

| விவரம் | தொகை | தொகை |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு<br>கூட்:- வாடிக்கையாளர் நேரடிவங்கி செலு | | 7130<br>800 |
| | | **7930** |
| கழி:- செலுத்திய காசோலை வசூலாகாது | | 1000 |
| **வங்கி அறிக்கையின் படி இருப்பு** | | **6930** |

| **38. ரொக்கத் தள்ளுபடி** | **வியாபாரத் தள்ளுபடி** |
|---|---|
| பொருளை வாங்கியவர் தொகையை முன்கூட்டி செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. | வாங்குபவர் அதிகப்படியான எண்ணிக்கையில் பொருட்களை வாங்கும் பொருட்டு அவர்களை ஊக்குவிப்பதற்காக இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. |
| ரொக்கத் தள்ளபடி, விற்றவர் அல்லது கடனீந்தோரால் வாங்கியவர் அல்லது கடனாளிக்கு தொகையைத் திரும்ப செலுத்தும் போது வழங்கப்படுகிறது. | வியாபாரத் தள்ளுபடி, விற்றவரால் வாங்கியவருக்கு பொருட்களை விற்கும் போது வழங்கப்படுகிறது. |
| தள்ளுபடி திரும்ப செலுத்தும் காலத்தை அடிப்படையாகக் கொண்டது. | தள்ளபடி பொருட்கள் வாங்கிய அளவினை அடிப்படையாகக் கொண்டது. |
| கணக்கேடுகளில் பதியப்படுகிறது. | கணக்கேடுகளில் பதியப்படுவது இல்லை. |
| இடாப்பிலிருந்து கழித்துக் காட்டப்படமாட்டாது | இடாப்பிலிருந்து கழித்து காட்டப்படும். |

| **39. குறிப்பேடு** | **பேரேடு** |
|---|---|
| நடவடிக்கை நிகழ்ந்தவுடன் இதில் பதிவு செய்யப்படும். | குறிப்பேடு தயாரித்த அதே நாளில் அல்லது துணைஏடுகள் பராமரித்து வந்தால், ஒரு குறிப்பிட்ட காலத்தின் இறுதியில் அதாவது வாரத்தின் கடைசி நாள் அல்லது இரு வாரங்களுக்கு ஒரு முறை இதில் எடுத்தெழுதப்படும். |
| பதிவு செய்வது முதல் நிலையாகும் | குறிப்பேட்டில் பதிந்த பிறகு பேரேடு தயாரிப்பதால், இது இரண்டாவது நிலையாகும். |
| நடவடிக்கைகள் நிகழ்ந்த வரிசைப்படி அதாவது நடவடிக்கைகள் நிகழ்ந்த நாளின்படி பதிவு செய்யப்படுகிறது. | கணக்குகளை வரிசைப்படி பதிவுகள் செய்யப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| **40.ஆள்சார் கணக்கு** | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
| **சொத்து கணக்கு** | உள்வருவதை பற்று செய்க | வெளிச் செல்வதை வரவு செய்க |
| **பெயரளவு கணக்கு** | அனைத்து நட்டங்களையும் செலவுகளையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும் ஆதாயங்களையும் வரவு செய்க. |

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X3=21**

**41.அ. .கணக்கியல் சமன்பாடு**

| | **ரொக்கம் +** | **சரக்கிருப்பு =** | **முதல்** | **+ பொறுப்பு** |
|---|---|---|---|---|
| தொழில் தொடங்கியது | 80000 | | 80000 | |
| சரக்கு வாங்கியது | -30000 | 30000 + | 0 + | 0 |
| | 50000+ | 30000= | 80000 | 0 |
| சம்பளம் | (-)5000 | +0 | (-)5000 | 0 |
| | 45000 | +30000= | 75000 | +0 |
| சரக்கு வாங்கியது | (-)5000 | +5000 | +0 | +0 |
| | 40000 | +35000= | 75000 | +0 |
| கூடுதல் முதல் | (+)10000 | | (+)10000 | |
| | **50000** | **+35000=** | **85000** | **+0** |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**41.ஆ.** பிரதீப் என்பவரது தனிப்பத்தி ரொக்கஏடு

| நாள் | பெறுதல்கள் | தொகை | நாள் | செலுத்தல்கள் | தொகை |
|---|---|---|---|---|---|
| ஏ1 | முதல் | 27000 | ஏ5 | கொள்முதல் | 6000 |
| 10 | விற்பனை | 11000 | 13 | வங்கி | 5000 |
| 14 | விற்பனை | 9000 | 21 | எழுதுபொருள் | 200 |
| 29 | வங்கி | 4000 | 25 | முருகன் | 14000 |
| | | | 26 | கழிவு | 700 |
| | | | **30** | **இருப்பு கீஇ** | **25100** |
| | | **51000** | | | **51000** |
| **மே1** | **இருப்புகீகொ** | **25100** | | | |

**42.அ.** ஜெயசீலியின் குறிப்பேட்டுப்பதிவுகள்

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| 2018 ஜன1 | ரொக்க க/கு ப<br>ஜெயசீலியின் முதல் க/கு | 80000 | 80000 |
| 2 | வங்கி க/கு ப<br>ரொக்க க/கு | 40000 | 40000 |
| 3 | கொள்முதல்க/கு ப<br>ரொக்க க/கு | 5000 | 5000 |
| 4 | ரொக்க க/கு ப<br>லிப்டன் க/கு | 10000 | 10000 |
| 5 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு | 11000 | 11000 |
| 6 | சம்பள க/கு ப<br>ரொக்க க/கு | 5000 | 5000 |
| 7 | லிப்டன் க/கு ப<br>வங்கி க/கு | 10000 | 10000 |
| 8 | அறைகலன்க/கு ப<br>ரொக்க க/கு | 4000 | 4000 |
| 9 | மின்கட்டணக/கு ப<br>ரொக்க க/கு | 1000 | 1000 |
| 10 | காப்பீட்டு முனைம க/கு ப<br>வங்கி க/கு | 300 | 300 |

**42.ஆ.** குணசேகரன் என்பவரின் முப்பத்தி ரொக்கஏடு

| நா | பெறு | தே | ரொ | வங் | நா | செலு | தே | ரொ | வங் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச1 | இருகீபெ | | 50000 | 90000 | 6 | வங் | எ | 18000 | |
| 5 | ரோகி | | | 14500 | 10 | ரொ | | | 2000 |
| 6 | ரொக்க | எ | | 18000 | 12 | கொ | | | 9800 |
| 7 | விற்ப | | | 11800 | 27 | ரோ | | | 14500 |
| 10 | வங்கி | எ | 2000 | | | | | | |
| 14 | நதியா | | | 18000 | **31** | **கீஇ** | | **34000** | **126000** |
| | | | **52000** | **152300** | | | | **52000** | **152300** |
| **ஏ1** | **இகீகெ** | | **34000** | **126000** | | | | | |

**43.அ.** ரமேஷின் குறிப்பேட்டுப்பதிவுகள்

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| 2018 ஜன1 | ரொக்க க/கு ப.<br>சரக்கிருப்பு க/கு ப.<br>அறைகலன் க/கு ப.<br>ரமேஷின் முதல் க/கு | 300000<br>80000<br>27000 | 407000 |
| 3 | அறைகலன் க/கு ப<br>ஜெயலெட்சுமி விறபனையக க/கு | 28000 | 28000 |
| 7 | கொள்முதல் க/கு ப<br>சியாம் க/கு | 50000 | 50000 |
| 8 | சியாம் க/கு ப<br>செ.மா.சீ க/கு | 50000 | 50000 |
| 9 | ஜெயலெட்சுமி விறபனையக க/கு ப<br>வங்கி க/கு | 14000 | 14000 |

**43.ஆ.** காமாட்சி நிறுவனத்தின் வங்கி சரிக்கட்டும் பட்டியல்

| விவரம் | தொகை | தொகை |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு<br>கூட்:- இணையம் மூலம் செ.ரொ.பதியவில் | | 10500<br>1000 |
| | | **11500** |
| கழி:- வங்கியில் வரவு வைக்கப்பட்டது செலு.காசோ.வங்கி.வரவு வைக்கபடவில்லை<br>காசோலை புத்தக கட்டணம் ரொ.ஏ.பதிய | 5500<br>7000<br>200 | **12700** |
| **வங்கி அறிக்கையின் படி இருப்பு** | | **1200** |

**44.அ.** குறிப்பேட்டுப்பதிவுகள்

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| 2017 அ10 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு | 30000 | 30000 |
| 14 | கோபி க/கு ப<br>விற்பனை க/கு | 12000 | 12000 |
| 20 | ரொக்க க/கு ப<br>கோபி க/கு | 12000 | 12000 |

**ரொக்க கணக்கு**

| நாள் | விவ்ரம் | தொ | நாள் | விவரம் | தொ |
|---|---|---|---|---|---|
| அ10<br>20 | விற்பனை க/கு<br>கோபி க/கு | 30000<br>12000 | 31 | **இருப்புகீ/இ** | **42000** |
| | | **42000** | | | **42000** |
| **நவ1** | **இருப்புகீ/கொ** | **42000** | | | |

**விற்பனை கணக்கு**

| நாள் | விவ்ரம் | தொ | நாள் | விவரம் | தொ |
|---|---|---|---|---|---|
| ஆ31 | **இருப்புகீ/இ** | 42000 | அ10<br>14 | ரொக் க/கு<br>கோபி க/கு | 30000<br>12000 |
| | | **42000** | | | **42000** |
| | | | நவ1 | **இருப்புகீ/கொ** | **42000** |

**44ஆ.** பாகுபடுத்தப்பட்ட சில்லரை ரொக்க ஏடு

| பெ.தெ | நா | விவரம் | தொ | பய | வ | அ | கூ | எழு | பல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 500 | 1 | ரொக் | | | | | | | |
| | 2 | பயண | 5 | 5 | | | | | |
| | | வண்டி | 12 | | 12 | | | | |
| | 3 | அஞ்ச | 15 | | | 15 | | | |
| | | கூலி | 66 | | | | 66 | | |
| | 4 | எழுது | 134 | | | | | 134 | |
| | | போக் | 18 | 18 | | | | | |
| | 5 | பழுது | 65 | | | | | | 65 |
| | | பய | 11 | 11 | | | | | |
| | | வண்டி | 24 | | 24 | | | | |
| | | **மொத்** | **350** | **34** | **36** | **15** | **66** | **134** | **65** |
| | 5 | **இகீஇ** | **150** | | | | | | |
| 500 | | | **500** | | | | | | |
| 150 | 6 | இகீபெ | | | | | | | |
| 350 | | ரொக் | | | | | | | |

**45அ.** ஆனந்த் என்பவரின் இருபத்தி ரொக்கஏடு

| நா | பெறுதல்க | தொகை | | நா | செலுத்த | தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | த | ரொக் | | | த | ரொக் |
| 1 | இருப்புகீகெ | | 19500 | 15 | மின்கட்ட | | 12500 |
| 4 | விற்பனை | | 32000 | 17 | கணிப்பெ | | 16800 |
| 9 | கோபு | 200 | 11800 | 25 | காந்தி | 300 | 19700 |
| 28 | திருவேங்க | 100 | 8900 | 30 | வி.செலவு | | 3500 |
| | | | | **31** | **இருப்கீஇ** | | **19700** |
| | | 300 | **72200** | | | | **72200** |
| **ஜ** | **இருப்புகீகெ** | | **19700** | | | | |

**45ஆ.** ஆனந்த் கணக்கு

| நா | விவ்ரம் | தொ | நாள் | விவரம் | தொ |
|---|---|---|---|---|---|
| 15<br>20 | ரொக்க க/கு<br>ரொக்க க/கு (3980+40) | 2000<br>4000 | 1<br>18<br>25 | ரொக் க/கு<br>கொள் க/கு<br>கொள் க/கு | 4000<br>8000<br>5000 |
| **31** | **இருப்பு கீ/இ** | **11000** | | | |
| | | **17000** | | | **17000** |
| | | | | **இருப்புகீ/கொ** | **11000** |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**46.அ.** சந்தோஷ் கொள்முதல் ஏடு

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| 2017 | **பிரசாத்** | | |
| ஏப்1 | 100மீ சில்க் துணி 1மீ 450 வீ100 | 45000 | |
| | 75மீ வெல்வெட் துணி 1மீ 180வீ | 13500 | 58500 |
| **20** | **ஹரிராம்** | | |
| | 50கட்டுகள் காடாத்துணி 1 730 | 36500 | |
| | 80 கட்டுகள் காலிக்கோ 1மீ650 | 52000 | **8850** |
| | **கொள்முதல்** | | **147000** |

சந்தோஷ் விற்பனை ஏடு

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| 2017 | **ரத்தினம்** | | |
| ஏப்10 | 60மீ சில்க்துணி 1மீ 490 60 | 29400 | |
| | 50மீ வெல்வெட் துணி, 1மீ 210வீ | 10500 | 39900 |
| **18** | **நாதன் நிறுவனம்** | | |
| | 100 மீ சில்க் துணி 1மீ 510வீ | | 51000 |
| | **விற்பனை** | | **90900** |

**46.ஆ.** ராஜேஷ் என்பவரின் இருப்பாய்வு

| வஎ | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| 1 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 13000 | |
| 2 | கையிருப்பு ரொக்கம் | 1000 | |
| 3 | பயணச்செலவுகள் | 350 | |
| 4 | பெற்ற தள்ளுபடி | | 1300 |
| 5 | எடுப்புகள் | 7000 | |
| 6 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | 12000 |
| 7 | கடனாளிகள் | 17100 | |
| 8 | வங்கிக் கட்டணம் | 750 | |
| 9 | முதல் | | 25900 |
| | **மொத்தம்** | **39200** | **39200** |

**47.அ.** வங்கி சரிக்கட்டும் பட்டியல்

| விவரம் | தொகை | தொகை |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு<br>கூட்:- விடுத்த காசோ முன்னிலை ப.விலன் | | 300<br>1000 |
| | | 1300 |
| கழி:- வைப்பு கா.வசூலித்த வரவு வைக்பட<br>வங்கியால் பிடித்தம் செய்த வட்டி<br>வங்கி செலுத்திய வாடகை | 500<br>100<br>200 | **800** |
| **வங்கி அறிக்கையின் படி இருப்பு** | | **500** |

**47.ஆ.** பொன்னியின் விற்பனை ஏடு

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| ஆக1 | செந்தில் | | 20500 |
| ஆக்4 | மாதவன் | | 12800 |
| **7** | கனகசபை | | 7500 |
| | **விற்பனை ஏடு** | | **40800** |

பொன்னியின் விற்பனை திருப்ப ஏடு

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| ஆக15 | செந்தில் | | 1500 |
| ஆக்25 | மாதவன் | | 1800 |
| | **விற்பனை திருப்ப ஏடு** | | **3300** |

விற்பனைத் திருப்ப கணக்கு

| நாள் | விவரம் | தொகை | நாள் | விவரம் | தொ |
|---|---|---|---|---|---|
| ஏ 30 | கடனாளிகள்க/கு | 3300 | | | |

செந்தில் கணக்கு

| நாள் | விவரம் | தொ | நாள் | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | விற் | 20500 | ஏப் 6 | விற்பதிருப்ப க/கு | 1500 |
| | | | | **இருப்பு கீஇ** | **19000** |

மாதவன் கணக்கு

| நாள் | விவரம் | தொ | நாள் | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | விற் | 12800 | ஏப் 6 | விற்பதிருப்ப க/கு | 1800 |
| | | | | **இருப்பு கீஇ** | **11000** |

கனகசபை கணக்கு

| நாள் | விவரம் | தொ | நாள் | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | விற் | 7500 | ஏப் 6 | **இருப்பு கீஇ** | **7500** |

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com